**Kalki Subramaniam,**
Member and Southern region representative,
National Council for Trans Persons (NCTP),
Minister of Social Justice and Empowerment,
Government of India
+91 7639741916 | writetokalki@gmail.com | www.kalkisubramaniam.com

தேதி: 25.03.2026

அனுப்புநர்:
கல்கி சுப்ரமணியம்
உறுப்பினர் மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் பிரதிநிதி,
மத்திய திருநர் தேசிய கவுன்சில் (NCTP).

பெறுநர்:
மாண்புமிகு அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் அவர்கள்,
சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்,
சாஸ்திரி பவன், புது தில்லி.
நாள்: 25 மார்ச், 2026

பொருள்: திருநர் தேசிய கவுன்சில் (NCTP) உறுப்பினர் பதவியிலிருந்து விலகுதல் - ராஜினாமா கடிதம்.

மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம். மத்திய திருநர் தேசிய கவுன்சிலின் (NCTP) உறுப்பினர் மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் பிரதிநிதி என்ற பொறுப்பிலிருந்து நான் உடனடியாக விலகுகிறேன் என்பதை இக்கடிதத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் மீது நம்பிக்கை வைத்து, இந்த உயரிய பொறுப்பில் என்னை நியமித்த அமைச்சகத்திற்கும், உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிப்ரவரி 2026 வரை அமைச்சக அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியது ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது. இருப்பினும், தற்போதைய சூழலில் இந்தப் பதவியில் என்னால் நீடிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்டம் 2026, திருநங்கைகள், திருநம்பிகள் மற்றும் இடைபாலின (Intersex) சமூகத்தினருக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இச்சட்டத்தை உருவாக்கும்போது, ஒரு சட்டப்பூர்வ அமைப்பான தேசிய கவுன்சிலின் (NCTP) உறுப்பினர்களிடமோ அல்லது என்னிடமோ எந்தவித ஆலோசனையும் நடத்தப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தென்னிந்திய மாநிலங்கள் உட்பட, இந்தியா முழுவதும் உள்ள லட்சக்கணக்கான திருநர்கள் மற்றும் இடைபாலின மக்கள் இந்த சட்டத்திருத்தத்தை வன்மையாக எதிர்க்கின்றனர். அவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் ஒரு பிரதிநிதியாக, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து, அவர்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டியது எனது கடமையாகும்.
தனிமனித அடையாளத்தையும், கண்ணியத்தையும் கேள்விக்குள்ளாக்கும் இந்த சட்டத்திருத்தத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, என் சமூக மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக எனது பதவியை நான் ராஜினாமா செய்கிறேன்.

இறுதியாக எனது ஆங்கில நூலான We Will Not Be Erased' நூலின் The War என்ற கவிதையிலிருந்து சில வரிகள்:

"நெருப்பில் எழுந்த
கலகக்காரி அவள்,
இது அவளின்
உரிமைக்கான கலகம்,
கண்ணியத்திற்கான கலகம்,
மதிப்புமிகு வாழ்க்கைக்கான கலகம்,
அவளுக்காக,
அவளைப் போன்றோருக்காக,
ஊமையாக்கப்பட்ட குரல்களுக்காக,
சமத்துவமற்ற உலகை
எதிர்த்து நிற்கும் கலகம்.
அவளின் கலகம்
அவர்களின் கனவுகளின் தீப்பொறி,
அவர்களின் வாழ்வின் ஒளி,
அவர்களின் சுதந்திரத்தின் சின்னம்!"

தங்கள் நம்பிக்கைக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகுந்த கண்ணியத்துடன்,

Kalki Subramaniam

கல்கி சுப்ரமணியம்,
உறுப்பினர் மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் பிரதிநிதி,
மத்திய திருநர் தேசிய கவுன்சில் (NCTP).